(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024
# National Field Work Centre, Thondaimanaru
## 3rd Term Examination - 2024

| | | |
|---|---|---|
| புவியியல் Geography | Three Hours | 33 |
| | Gr. 12 (2024) | T |
| | | I,II |

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள்:

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி I, 15 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் அ, ஆ, இ என மூன்று பகுதிகள் தரப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி I, பகுதி III ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

## பகுதி I

1. உலகின் இயற்கைத் தாவரப் பரம்பலை எடுத்துக் காட்டும் படம்
   (1) இடவிளக்கப்படம் (2) சமவுயரக் கோட்டுப் படம்
   (3) புள்ளிப்படம் (4) கருப்பொருள் படம்
   (5) நிழற்படம் (...........)

2. இடவிளக்கப் படங்களில் பாதுகாக்கப்பட்ட வனம் மற்றும் மணற்குன்றுகளைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படும் நிறங்கள் முறையே
   (1) பச்சை, கபிலம் (2) கறுப்பு, கபிலம் (3) கபிலம், நீலம்
   (4) மஞ்சள், சிவப்பு (5) பச்சை, மஞ்சள் (...........)

3. காவித் தரவுகளில் பல்கோணம் மூலம் எடுத்துக்காட்டப்படுவது
   (1) நீர்த்தேக்கம் (2) வீதி (3) நதி (4) கட்டடம் (5) கிணறு (...........)

4. விண்வெளியில் $300\ km - 400\ km$ இடைப்பட்ட உயரத்தில் இயங்கி வருபவவை
   (1) உயர்மட்ட செய்மதிகள் (2) விண்கலம் (3) தாழ் உயர செய்மதி
   (4) விண்வெளிப் பிரிவு (5) விண்வெளி நிலையம் (...........)

5. இடவிளக்கப் படங்களில் உள்ள தகவல்களின் உள்ளடக்கத்தினை விளங்கிக் கொள்வதற்கு அவசியமானது
   (1) அளவுத்திட்டம் (2) திசை (3) தனி அமைவிடம்
   (4) படக்குறி விளக்கம் (5) சார்பு அமைவிடம் (...........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

6. புவி நடுக்கத்தின் செறிவை அளவிடுவது
   (1) முதன்மை அலைகள்  (2) ரிச்டர் அளவீடு
   (3) புவிநடுக்கவியல் மானி  (4) மெர்காலி அளவீடு
   (5) புவிநடுக்க வரைபு (...........)

7. ஆற்றின் இளமைக் காலத்தில் உருவாகும் நிலவுருவம்
   (1) பனியெருத்தேரி  (2) மலையடி விளிம்பு  (3) பானைக்குழி
   (4) கழிமுகம்  (5) பரப்பும் கிளையாறு (...........)

8. நிலச்சரிவை ஏற்படுத்துகின்ற மானிடக் காரணி
   (1) இயற்கை நீரோட்டங்களைத் தடுத்தல்  (2) மழைவீழ்ச்சிச் செறிவு
   (3) தாய்பாறை சிதைவுறுதல்  (4) நிலத்தின் சாய்வுத் தன்மை
   (5) புவியதிர்ச்சி (...........)

9. சாரீரப்பதன் அளவு 100% வீத மட்டத்தினை அடையும் போது நீராவியில் ஏற்படும் மாற்றம்
   (1) உச்சமட்ட ஈரப்பதன் காணப்படும்.
   (2) தனியீரப்பதன் உயர்வாகக் காணப்படும்.
   (3) ஈரப்பதன் குறைந்த நிலையில் காணப்படும்.
   (4) ஈரப்பதன் உயர்நிலையில் காணப்படும்.
   (5) உறைநிலை அடையும் (...........)

10. உலகின் அமுக்க வலயங்களை அண்மித்துச் செயற்படுகின்ற காற்றுப் போக்கு
   (1) இரண்டாம் நிலைச் சுற்றோட்டம்  (2) மூன்றாம் நிலைச் சுற்றோட்டம்
   (3) பொதுச் சுற்றோட்டம்  (4) இடை அயன ஒருங்கல் செயற்பாடு
   (5) காற்றுச் சுழற்சி (...........)

11. குடித்தொகைக் கூம்பில் பிறப்பு, இறப்பு வீதக் குறைவும், ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தலும் ஏற்படும் கட்டம்
   (1) நிலையான கட்டம்  (2) நிலைமாறும் கட்டம்  (3) ஆரம்பக் கட்டம்
   (4) சுருங்கும் கட்டம்  (5) விரிவடையும் கட்டம் (...........)

12. ஆரம்பப் பொருளாதார நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற பிரதேசங்களில் காணப்படும் குடியிருப்பு வகை
   (1) கிராமக் குடியிருப்பு  (2) நகரச் சூழல் குடியிருப்பு
   (3) நகரப் பிரதேசக் குடியிருப்பு  (4) நகரக் குடியிருப்பு
   (5) பெரு நகரக் குடியிருப்பு (...........)

13. உலகில் நகராக்க மட்டம் உயர்வாகக் காணப்படும் வலயம்
   (1) ஐரோப்பா  (2) இலத்தீன் அமெரிக்கா  (3) ஆசியா
   (4) அவுஸ்ரேலியா  (5) ஆபிரிக்கா (...........)

14. பயிர்களின் வேர்களுக்கு ஒரு குழாயினூடாக நீரானது துளித்துளியாக விநியோகித்தல்
   (1) தூவல் நீர்ப்பாசனம்  (2) மேற்பரப்பு நீர்ப்பாசனம்  (3) தரைக்கீழ் நீர்ப்பாசனம்
   (4) நுண் நீர்ப்பாசனம்  (5) சொட்டு நீர்ப்பாசனம் (...........)

15. சேதன விவசாயத்தினால் ஏற்படும் சூழல்சார் நன்மை
   (1) கிராம நகர இடப்பெயர்வு குறைவடையும்
   (2) பெண்கள் வலுவூட்டப்படுவர்
   (3) வலுச்சக்தி நுகர்வு குறைவடையும்
   (4) ஆரோக்கியமான சமூகம் உருவாகும்.
   (5) சிற்றளவு விவசாயிகள் நன்மையடைவர் (...........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

## பகுதி II

**அறிவுறுத்தல்கள்:**

- **பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.**
- **பகுதி III இல் அ, ஆ, இ என மூன்று பகுதிகள் தரப்பட்டுள்ளன. ஒரு பகுதியிலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
- **இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு இலங்கையின் 1 : 50,000 அளவுத்திட்டத்திலமைந்த இடைவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும், உலகப்புறவுருவப் படமும் வழங்கப்படும்.**

1. இலங்கை நில அளவைத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1 : 50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. சமவுயரக் கோடுகள் 20 மீற்றர் இடைவெளியில் காட்டப்பட்டுள்ளது. இப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**குறிப்பு**

- **விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும், அதன் உப பிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.**
- **இடவிளக்கப்படத்தின் மேல் விடைகள் எழுதப்படக் கூடாது.**
- **உமது விடைத்தாளுடன் தரப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தினை இணைக்க வேண்டாம்.**

(i) *1 - 4* வரை இலக்கமிடப்பட்ட விடயங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) சதுரம் A யில் உள்ள சேவை நிலையங்கள் நான்கினைத் தருக. *(02 புள்ளிகள்)*

(iii) சதுரம் A யை 1:25000 என்ற அளவுத்திட்டத்தில் வரைக. *(02 புள்ளிகள்)*

(iv) தரப்பட்டுள்ள பிரதேசத்தின் குடியிருப்பு வடிவங்களைக் குறிப்பிட்டு அவ்வடிவங்களைத் தீர்மானித்த காரணிகளை விபரிக்குக. *(04 புள்ளிகள்)*

(v) படப்பிரதேசத்தின் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கும் நிலப் பயன்பாட்டிற்கும் இடையிலான இடைத்தொடர்பினை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(vi) B-423 வீதியின் நீளத்தினைக் கிலோமீற்றரில் தருக. *(01 புள்ளி)*

(vii) படத்தில் காட்டப்பட்டுள்ள *X* இல் இருந்து *Y* வரையான பகுதிக்கு குறுக்குவெட்டு முகம் ஒன்றினை வரைக. *(04 புள்ளிகள்)*

(viii) உமக்குத் தரப்பட்ட இப்பிரதேசம் பல இன, பல் மதங்களைப் பின்பற்றுகின்ற பகுதியாகும். இரண்டு காரணிகளினூடாக விளக்குக. *(01 புள்ளி)*

2. தரப்பட்டுள்ள உலகப்புறவுருவப் படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) இஸ்ரேல்

(ii) அங்காரா

(iii) மத்தியகோடு

(iv) தித்திக்காக ஏரி

(v) காக்கசஸ் மலைத்தொடர்

(vi) மறேடாலிங் நதி

(vii) அரிசோனா பாலைவனம்

(viii) எட்னா எரிமலை

(ix) 01.01.2024 இல் புவி நடுக்கம் ஏற்பட்ட நாடு.

(x) 2050 இல் ஆபிரிக்காவில் அதிக குடித்தொகையைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படும் நாடு

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

## பகுதி III

### "அ" பகுதி - செய்முறைப் புவியியல்

3. (i) தொலையுணர்வுத் தொழில்நுட்பம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

   (ii) தொலையுணர்வு தொழில்நுட்பத்தில் (RS) தரவு சேகரிப்பதற்குப் பயன்படுகின்ற தொலையுணர்வு மேடைகள் என்பதனை விளக்குக. *(05 புள்ளிகள்)*

   (iii) தொலையுணர்வுத் தொழில்நுட்பத்தின் நான்கு பயன்பாடுகளைத் தருக. *(04 புள்ளிகள்)*

   (iv) நவீன படவரைகலையின் பொது இயல்புகள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

4. (i) செய்முறைப் புவியியலில் பயன்படுத்தப்படுகின்ற நான்கு நுட்பமுறைகளைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

   (ii) படம் ஒன்றினை அமைக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய அடிப்படை அம்சங்கள் மூன்றினை விளக்குக. *(04 புள்ளிகள்)*

   (iii) அச்சிடப்பட்ட படங்களுக்கும் கணினிப் படங்களுக்கும் இடையிலான பண்புகளை ஒப்பிட்டு ஆராய்க. *(05 புள்ளிகள்)*

   (iv) பௌதிக - பண்பாட்டம்சங்களைப் பகுத்து ஆராயும் போது கவனம் செலுத்த வேண்டிய மூன்று விடயங்களைத் தருக. *(04 புள்ளிகள்)*

### "ஆ" - பகுதி பௌதிகப் புவியியல்

5. (i) புவி பெற்றுக்கொள்கின்ற படிவு வீழ்ச்சியின் வகைகள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

   (ii) காலநிலையைக் கட்டுப்படுத்துகின்ற மூன்று காரணிகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iii) இலங்கையின் காலநிலை வலயங்களைப் பெயரிட்டு அதில் ஒன்றின் பண்புகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iv) இலங்கையின் காலநிலையில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணிகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

6. (i) புவிக்கோளத்தின் இரண்டு பிரிவுகளையுப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

   (ii) மேலே (i) இல் பெயரிட்ட பிரிவுகளில் ஒன்றின் பண்புகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

   (iii) உயிர்க்கோளத்தின் மூன்று பண்புகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iv) நீரியல் வட்டத்தின் மாதிரியை வரைந்து அதன் படிமுறைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

### "இ" - பகுதி மானிடப் புவியியல்

7. (i) உலகின் குடித்தொகை கூடிய நான்கு வலயங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

   (ii) சனத்தொகையின் சமனற்ற பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணிகளை உதாரணங்களுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iii) முதியோர் தொகை அதிகரிப்பதனால் ஏற்படுகின்ற மூன்று பிரச்சினைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iv) முதியோர் தொகை அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்ற மூன்று காரணிகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

8. (i) சேதன விவசாயம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

   (ii) சேதன விவசாயத்தில் பயன்படுத்தப்படும் முறைகள் மூன்றினை விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iii) சேதன விவசாயத்தினால் ஏற்படுகின்ற மூன்று நன்மைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iv) விவசாயத்தின் தனியுரிமைப் போக்கினால் ஏற்படுகின்ற மூன்று பிரச்சினைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

**தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு நடாத்தும் மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024**

**தரம் 12 (2024) புவியியல்**



# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

**SRI LANKA 1 : 50,000 – SHEET No.76 – HAPUTALE (PART OF)**




SCALE 1:50000